VEDABHARATHI SEITHIGAL (Tamil Monthly Magazine) 40
REGD No. : TN/CC(S)DN/571/18-20 RNI No : TNTAM/2016/73726
TN/PM G (CCR) / WPP 605/19-20 / Valid from 28.02.2019 to 31.12.2020




தரமான நகைகளுக்கு
சரியான முகவரி....

சூர்யா ஜுவல்லர்ஸ்® A/c

287,288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன்: 0421 2241829 | 78, ஈஸ்வரன் கோயில் வீதி, குலாலர் பிள்ளையார் கோயில் எதிரில், திருப்பூர். போன் : 0421 2241827

சூர்யா எலக்ட்ரிக்கல்ஸ்

7(2), புளியமரத்தோட்டம், மங்கலம் ரோடு, திருப்பூர் 4.
போன்: 0421 2241826

To Printed Matter

If not delivered please return to
VEDABHARATHY
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.

# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL

Tamil Monthly
தமிழ் மாத இதழ்

மலர்:3 இதழ்:7 ஏப்ரல்:2019 ரூ.10/– வருட சந்தா:ரூ.100/–
Volume:3 Issue:7 APR:2019 Rs.10/- Annual Subs: Rs.100/-



# ஸ்ரீ மஹா மேரு மண்டலி

81/1, மன்னப்பன் தெரு,
கோட்டூர், சென்னை – 600 085.
**போன்: 044 – 2447 4744**

## சித்ரா பௌர்ணமி திருவிழா - 2019

ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருடம் சித்திரை மாதம் 6–ம் தேதி **(19.04.2019)** வெள்ளிக்கிழமை கீழ்கண்ட நிகழ்ச்சி நிரல்கள்படி குங்குமார்ச்சனை, சண்டி ஹோமம் மற்றும் அபிஷேகங்கள் ஸகிதம் சித்ரா பௌர்ணமி விழா நடைபெற உள்ளன. பக்த கோடிகள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஸ்ரீ அம்பாளின் பரிபூர்ண அனுக்ரஹத்தைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**இடம் :** அருள்மிகு ஸ்ரீ மதுரகாளியம்மன் ஆலயம்
சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம்

**முன்னிலை :** ஸ்ரீஸ்ரீஸ்ரீ மதுராம்பிகாநந்த ப்ரஹ்மேந்திர ஸரஸ்வதி அவதூத ஸ்வாமிகள்

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| 19.04.2019 காலை 8.00 மணி முதல் | ஸ்ரீ சண்டி ஹோமம் |
| காலை 8.00 மணி முதல் 11.00 மணி வரை | ஸ்ரீ சிவானந்த லஹரி<br>ஸ்ரீஸௌந்தர்ய லஹரி<br>ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம் |

இப்படிக்கு,
நிர்வாக அறங்காவலர், ஸ்ரீ மஹாமேரு மண்டலி

குறிப்பு: 1. அனுமதிச் சீட்டு வைத்துள்ளவர்கள் மட்டுமே பாராயணம் செய்ய அனுமதிக்கப்படுவர்
2. பாராயணம் செய்ய அனுமதிக்கப்பட்டவர்களுக்கு உணவு வழங்கப்படும்.




இமைப் பொழுதில்
**கண் முன்**
**உங்கள் கிரெடிட் கார்டு**

சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி கிரெடிட் கார்டு




சிட்டி யூனியன் பேங்க் வழங்கும் உடனடி ஆன்லைன் டைட்டானியம் கிரெடிட் கார்டு. வங்கியில் வைப்புக் கணக்கு (Fixed Deposit) வைத்துள்ள அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் இந்த கிரெடிட் கார்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

சிட்டி யூனியன் பேங்கின் வாடிக்கையாளர்கள் இந்த கிரெடிட் கார்டினை பெற CUB நெட் பேங்கிங் மூலம் எளிமையான முறையில் உடனடியாக விண்ணப்பிக்கலாம். நீங்கள் விண்ணப்பித்தவுடன் உங்கள் கம்யூட்டர் திரையில் Virtual Credit Card தோன்றும். இதனை உடனடியாக உபயோகப்படுத்தி ஆன்லைனில் ஷாப்பிங் மற்றும் டிக்கட் புக்கிங், பணம் செலுத்துதல் ஆகிய தேவைகளைப் பூர்த்தி செய்யலாம்.

உங்கள் பிளாஸ்டிக் கிரெடிட் கார்டு விரைவிலேயே உங்கள் இல்லத்தையோ / அலுவலகத்தையோ வந்தடையும்.

CUB TRUST AND EXCELLENCE SINCE 1904
**சிட்டி யூனியன் பேங்க்**
www.cityunionbank.com ராசியான பேங்க், ஈஸியான பேங்க்

For assistance, Call our 24x7 Customer Care at 044-7122 5000, Mobile : 7299075077 / 7299075078
Keep your bank account details, passwords, ATM PIN, OTP etc. safe. Do not share with anyone.

## ANATHA PRETHA KAINKARYA TRUST
## அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

G-2, Vijay Builders, Plot No.24, Kandaswamy Nagar, 9th Cross Street,
Palavakkam, Chennai - 600 041, India.
Mobile : 98407 44400, 94450 73431, 98400 45776
Email : sreedhar.apkt@gmail.com Website : www.dharmaa.org



### ஸ்ரீ காஞ்சி
### மஹா ஸ்வாமிகளின் அருளுரை
### தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
### அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
### இது தான் அச்வமேதம்

இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்ம**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்

பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

***DONATE LIBERALLY TOWARDS CORPUS FUND***



Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39, Millers Road, Kilpauk, Chennai - 600 010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 42.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**





## வேதபாரதி செய்திகள்
**(ஆன்மீக மாத இதழ்)**

மலர்: 3 இதழ்: 7

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்
**ஆர்.வெங்கடராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 94434 95950

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை,
கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

**புத்தகக் குழு :**
ஸ்ரீ டி. சூரியநாராயணன்
டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்
ஸ்ரீமதி.காந்தலக்ஷ்மி சந்திரமௌலி
ஸ்ரீ ஸ்ரீகாந்தன்,
ஸ்ரீ சௌந்தரராஜன்,
ஸ்ரீ விஸ்வநாதன்
ஸ்ரீ ஸ்ரீநிவாசன்,
வேளச்சேரி ஸ்ரீ நடராஜன்,
ஸ்ரீ ஸ்வாமிநாதன்,
நங்கநல்லூர் ஸ்ரீ விஸ்வநாதன்,
ஸ்ரீ மணிசங்கர்

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
**Ph : 94434 95950**
Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

**REGD No : TN/CC(S) / DN / 571 / 18-20**
**RNI No : 1282188**
**Title Code : TNTAM/2016/73726**
**R.Dic.No.1845/2015**
**VEDABHARATHI SEITHIGAL**
**(Tamil Monthly Magazine)**
**1-7th (1st Week) Every Month**
**TN/PM G (CCR) / WPP 605/19-20 /**
**Valid from 28.02.2019 to 31.12.2020**


## புத்தகத்தின் உள்ளே


ஒரு நிமிடம் உங்களோடு 4
ஏப்ரல் மாத விசேஷங்கள் 6
அட்டைப்பட விளக்கம் 7
பிரதக்ஷிணம் 10
ஸ்துதிகள் 12
சுபாஷிதம் 13
வாசகர் கடிதம் 14
சிருங்கேரி ஜகத்குரு மகா ஸ்வாமிகள் அருளியவை 16
பௌர்ணமி ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பூஜை 18
பெற்றோர்களே கவனியுங்கள் 26
தர்மத்தின் குரல் 28
மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் 30
தமிழ்ப்புத்தாண்டு ஸங்கல்பம் 32



**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.100
ஆயுள் சந்தா ரூ.1500

சந்தா அனுப்புகிறவர்கள்
**Vedabharathi**
என்ற பெயருக்கு காசோலையை
மேற்கண்ட அலுவலக முகவரிக்கு
அனுப்பவும்.

சந்தா புதுப்பிப்பவர்கள்
தங்களுடைய சந்தா எண்ணைத்
தவறாமல் குறிப்பிடவும்.

வங்கி மூலம் புத்தக சந்தா
நன்கொடை வழங்கிட
**VEDABHARATHI**
**City Union Bank, Velachery Branch**
**A/c No. 510909010005286**
**IFSC : CIUB 0000262**

புத்தக வடிவமைப்பு
**ரெம்ஸ் பிரிண்டர்ஸ்**
1, லட்சுமிநகர்,
100 அடி சாலை, வேளச்சேரி,
சென்னை - 42. செல்: 8939000064

## ஒரு நிமிடம் உங்களோடு!

மஹாபாரத யுத்தம் முடிந்ததும் பாண்டவர்கள் ஒரு தீர்த்தாடனம் புறப்பட்டார்கள். அவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனையும் தங்களுடன் வரும்படி அழைத்தார்கள். ஆனால் ஸ்ரீ கிருஷ்ணன் வருவதற்கு விருப்பம் இல்லை என்று கூறிவிட்டார். மீண்டும் அவர்கள் அழைத்தபோது ஸ்ரீ கிருஷ்ணன் அவர்களிடம் ஒரு வெள்ளரிக்காயைக் கொடுத்து "நீங்கள் போகும் கோயில்களில் எல்லாம் இதை அர்ச்சகரிடம் கொடுத்து பகவானுக்கு நைவேத்யம் செய்து தரும்படி கேட்டுக் கொள்ளுங்கள். எந்த எந்த தீர்த்தங்களில் குளிக்கிறீர்களோ அங்கெல்லாம் இதையும் நீரில் முக்கி கிருஷ்ணன் உங்களுடன் அந்த நீரில் முங்கியது போல் நினைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

பிறகு பாண்டவர்கள் சில நாட்கள் தீர்த்தாடனம் போய்விட்டு ஸ்ரீ கிருஷ்ணனிடம் விவரத்தைச் சொல்லி அவர் கொடுத்த வெள்ளிரிக்காயையும் அவரிடம் கொடுத்தார்கள் ஸ்ரீ கிருஷ்ணன் அதன் தோலை சீவச்சொல்லி, தண்டுகளாக வெட்டி எல்லோருக்கும் கொடுத்து " இதில் தெய்வீகத் தன்மை வந்துள்ளதா" என்று கேட்டார். ஆனால் அதைச் சாப்பிட்ட அனைவரும் முகம் சுளித்தார்கள். காரணம் அவ்வளவு கசப்பு. அப்போது பகவான் 'இது போல்தான் உங்களுடைய யாத்திரையும். போகும்போது உங்களுக்கு எந்த மனம் இருந்ததோ அந்த மனதோடுதான் திரும்பி வந்துள்ளீர்கள்" என்றார். இது போல்தான் நாமும்.

எந்த ஒரு பொருளும் நமக்கு திருப்தி அளிக்க வேண்டுமானால் அதில் உள்ள மனோபாவத்தை நாம் வித்தியாசப்படுத்தியிருக்க வேண்டும். உதாரணத்திற்கு நாம் கோயிலுக்குப் போய் பகவானுக்கு பழம் நிவேதனத்திற்கு கொடுக்கிறோம். அந்த பழத்தால் குருக்கள் பஞ்சாமிருதம் தயாரித்து நமக்கே அவருடைய கையால் தரும்போது நாம் அவரிடம் "நீங்கள் கைகளை தண்ணீரில் அலம்பிவிட்டீர்களா? என்று கேட்கமாட்டோம். அந்த இடத்தில் அவர் தருவதை பகவானின் பிரசாதமாக நாம் நினைக்கிறோம். அதே குருக்கள் நாம் கொடுத்த அதே பழத்தை ஒரு கவரில் போட்டு நமக்கே தரும்போது அது நமக்கு திருப்தி அளிக்காது. ஆனால் அதே



பழத்தின் மீது சிறிது துளசி அல்லது புஷ்பம் வைத்துக்கொடுத்தால் அதை நாம் பகவானின் பிரசாதம் என்ற திரப்தியோடு வாங்கிக் கொள்வோம். இந்த வித்தியாசம் நம்முடைய மனோபாவம். மனதில் ஏற்படும் மாற்றம்.

இதைத்தான் நம்முடைய மஹரிஷிகளும் மஹான்களும் கண்டார்கள். அதாவது மனித மனதில் பாவனை அதிகமாகும் போது நாம் அடையும் பொருட்களில் வித்தியாசம் தோன்றும் ஆதலால் நாம் மாற்ற வேண்டியது பொருட்களை அல்ல. நம்முடைய மனோபாவத்தைத்தான். இதைக்கண்டவர்கள் வாழ்ந்த பூமிதான் நம் பாரதபூமி. அதாவது நம் பாரத பண்பாடு மனது சம்பந்தப்பட்டது தான். மனிதனுடைய எல்லா சுக துக்கங்களுக்கும் காரணம் அவனுடைய மனதுதான். ஸ்ரீமத் பாகவதத்தில் பகவான் கபிலரின் உபதேசம்.

**சேத : கல்வஸ்ய பந்தாய முக்தயே சாத்மநோ மதம்/**
**குணேஷு ஸக்தம் பந்தாய ரதம் வா பும்ஸி முக்தயே//**
**(ஸ்ரீமம் பாகவதம் 3-25-15)**

இந்த ஜீவனுக்கு மனம்தான் பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் என்று கூறப்படுகிறது. விஷயங்களில் பற்றுதலடைந்தால் பந்தத்திற்கும், பரமேஸ்வரனிடத்தில் பற்றுதலடைந்தால் மோக்ஷத்திற்கும் காரணமாகிறது.

**நாயம் ஜனோமே ஸுகதுக்கஹேதுர் ந தேவதாத்மா க்ரஹகர்மகாலா:/**
**மனபரம் காரணமாமனந்தி ஸம்ஸார சக்ரம் பரிவர்தயேத் யத்//**
**(ஸ்ரீமத் பாகவதம் 11-23-43)**

எனது துக்கங்களுக்கு இந்த ஜனங்களோ, தேவதையும், ஆத்மாவும், கிரஹங்களும், கர்மமும் காலமும் காரணமன்று. இந்த ஸம்ஸார சக்தியை சுழலும்படி செய்கின்ற அந்த மனசுதான் காரணம் என்று வேதங்கள் கூறுகின்றன.

ஆகையால் நம்முடைய மனதில் Negative சிந்தனைகளுக்கு இடம் கொடுக்காமல் Positive வான சிந்தனைகளுடன் **"தஸ்மாத்ஸர்வேஷு காலேஷு"** என்று பகவான் கீதையில் கூறியதுபோல் எப்போதும் பகவானயே நினைத்திருப்போமாக.

**- டி. சூரியநாராயணன்**

## ஏப்ரல் மாத விசேஷங்கள்

### (ஏப்ரல் 1/2019 முதல் ஏப்ரல் 30/2019 வரை)

| தேதி | கிழமை | விசேஷம் |
|---|---|---|
| 1 | திங்கள் | வைஷ்ணவ ஏகாதசி விரதம் |
| 2 | செவ்வாய் | பிரதோஷம் |
| 3 | புதன் | மாத சிவராத்திரி |
| 4 | வியாழன் | அமாவாசை |
| 6 | சனி | வசந்த நவராத்திரி ஆரம்பம் / தெலுங்கு வருடப்பிறப்பு |
| 7 | ஞாயிறு | சமயபுரம் மாரியம்மன் உத்ஸவம் ஆரம்பம் |
| 8 | திங்கள் | முத்துஸாமி தீக்ஷிதர் ஜெயந்தி/கார்த்திகை விரதம் |
| 9 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 10 | புதன் | வசந்த பஞ்சமி |
| 11 | வியாழன் | சபரிமலை நடை திறப்பு |
| 13 | சனி | ஸ்மார்த்த ஸ்ரீராம நவமி |
| 14 | ஞாயிறு | தமிழ் வருட பிறப்பு / விஷுபுண்யகாலம்/ வைஷ்ணவ ஸ்ரீராம நவமி |
| 15 | திங்கள் | விஷுக்கணி/ஏகாதசி விரதம் |
| 17 | புதன் | பிரதோஷம் / மஹாவீர் ஜெயந்தி |
| 19 | வெள்ளி | சித்ரா பௌர்ணமி / கள்ளழகர் வைகை ஆற்றில் ஏழுந்தருளல் சபரிமலை நடை அடைப்பு |
| 21 | ஞாயிறு | பார்த்தசாரதி பெருமாள் கருட சேவை |
| 22 | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி |
| 23 | செவ்வாய் | வாஸ்து நாள் |
| 24 | புதன் | ஸ்ரீவராஹ ஜெயந்தி |
| 25 | வியாழன் | திருவல்லிகேணி பார்த்தசாரதி பெருமாள் ரதோத்ஸவம் |
| 27 | சனி | நடராஜர் அபிஷேகம் / சிரவண விரதம் |
| 28 | ஞாயிறு | ஸ்ரீரங்கம் நம்பெருமாள் கருட சேவை |



## அட்டைப்பட விளக்கம்

### ராம (மாயண) சகோதரர்கள்

ராம காவியமான ராமாயணத்தை நினைக்கும் போதே நம் மனதில் தோன்றுபவர்கள் ராம சகோதரர்களான ராம, லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் என்ற நான்கு சகோதரர்களே.

இதில் ஸ்ரீராமன் விஷ்ணுவின் அம்சம் என்றும், லஷ்மணன் ஆதி சேஷனின் அவதாரம் என்றும் பரத சத்ருகனர்கள் விஷ்ணுவின் கையில் இருக்கும் சங்கு சக்கரத்தின் அம்சம் என்றும் புராணத்தில் கூறப்பட்டுள்ளது. அதே போல அவர்கள் பிறப்பும் ஒரே நேரத்தில் நிகழ்ந்ததாலோ என்னவோ அவர்களிடையே அளவு கடந்த ஒற்றுமை காணப்பட்டது. சிறு வயது முதலே நால்வரும் ஒன்றாக விளையாடி ஒன்றாகவே உறங்கி குருகுலத்திலும் இணைந்தே கல்வி கற்றார்கள்.

ஸ்ரீராமன் எல்லோரிடத்திலும் சமமான அன்பு காட்டிய போதிலும் லஷ்மணனிடத்தில் சற்று கூடுதலான அன்பு செலுத்தினான். லஷ்மணனும் அதற்கும் ஒருபடி மேலாகச் சென்று ஸ்ரீராமனிடத்தில் அதீத பக்தியும் மரியாதையும் கொண்டு ஸ்ரீ ராமனின் அடிமையாகவே வாழ்ந்து வந்தான். ஸ்ரீராமனிடத்தில் பக்தியும் மரியாதையும் கொண்டிருந்தான். ஸ்ரீராமனின் ஆணைகளை மதித்து அப்படியே சிரமேற்கொண்டு நிறைவேற்றி வந்தான்.

நால்வரும் எக்காலத்திலும் இணைபிரியாத சகோதரர்களாக இருந்தார்கள். ராமாயண சகோதரர்களின் இந்த ஒற்றுமை இந்தகாலத்து சகோதரர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய ஒன்று. இதைப்போலவே ராமருக்கு உடன் பிறவாத சகோதரர்களும் இருந்தார்கள் என்பதை ராமாயணத்தின் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

ஆரண்ய காண்டத்தின் ஆரம்பத்தில் ஸ்ரீராமர், லஷ்மணன், சீதை ஆகிய மூவரும் கங்கை கரையில் நின்றுகொண்டு ஆற்றை எப்படி கடப்பது என்று யோசித்துக் கொண்டிருந்த போது படகோட்டிகளின் தலைவனான “குகன்” அங்கு வந்து அவர்களை நமஸ்கரித்து அவர்களுடைய தரிசனத்திற்காக தாம் காத்திருப்பதாகவும் தன் படகில் அவர்களை அக்கரைக்கு கொண்டு சேர்ப்பதாகவும் கூறினான். இதற்கு ஸ்ரீராமர் சம்மதிக்கவே குகன் ஸ்ரீராமரின் பாதங்களைக்

கழுவி, பூஜித்து, தான் கொண்டுவந்த மலைத் தேனையும், மீனையும் ஸ்ரீராமருக்கு அன்போடு கொடுத்தான். பின் இரவு முழுவதும் லஷ்மணனுடன் கண் விழித்திருந்து ஸ்ரீராமர் சீதைக்காக காவல் காத்தான். மறுநாள் அவர்களை பத்திரமாக கரை சேர்த்து ஸ்ரீராமரை நோக்கி "அண்ணலே, தங்களுக்கு பகைவர்களால் ஆபத்து நேருமானால் என் படைகள் யாவையும் கொண்டுவந்து தங்களைக் காப்பேன். அப்படி தங்களுக்கு ஒரு தீங்கு நேருமானால் அதற்கு முன் நான் இறந்துவிடுவேன்" என்றான். அதைக் கேட்ட ஸ்ரீராமர் "குகனே உன் அன்பிற்கு நான் அடிமை. நீ என் உயிர் போன்றவன். உன்னைக் காண்பதற்கு முன் உடன் பிறந்தவர்கள் நாங்கள் நால்வர் இருந்தோம். இப்போது உன்னையும் சேர்த்து உடன் பிறந்தவர்கள் நாம் ஐவரானோம்" அதை குகன் அன்புடன் ஏற்றுக் கொண்டான். உளமார்ந்த அன்பினால் ஏற்பட்ட நட்பு உடன்பிறப்பாக மாறியதை நாம் காண்கிறோம்.

அடுத்ததாக வாலியால் துரத்தி அடிக்கப்பட்ட 'சுக்ரீவன்", வாலியால் வரமுடியாத இடமாகிய "ரிச்யமூக" மலைமேல் அனுமனுடன் அமர்ந்திருந்தான். அப்போது வெகு தூரத்தில் ஸ்ரீராமனும், லக்ஷ்மணனும் சீதையைத் தேடிக்கொண்டு அந்த மலைப்பிரதேசத்திற்கு வந்து கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்த சுக்ரீவன் அவர்கள் இருவரும் வில் அம்புடன் வருவதால் அவர்கள் வாலியின் நண்பர்கள் தன்னை கொல்ல வருகிறார்கள் என்று நினைத்து அனுமனை அனுப்பி அவர்கள் யார் என்று அறிந்துவர சொன்னான். சுக்ரீவனின் உத்தரவுப்படி அனுமன் ஒரு பிரம்மச்சாரி வேடத்தில் ஸ்ரீராம லக்ஷ்மணர்களை சந்தித்து அவர்கள் யார் என்று அடையாளம் கண்டுகொண்டு ஸ்ரீ ராமனின் காலில் விழுந்து தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். அதன் பின் அவர்களை சுக்ரீவனிடம் அழைத்துச் சென்று விவரங்களைக் கூறுகிறான். ஸ்ரீராமன் சுக்ரீவனை ஆலிங்கனம் செய்துக் கொண்டு அவனைத் தன் சகோதரர்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்கிறார். பின் இருவரும் கை கோர்த்து அக்னி வலம் வந்து "இருவர்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் இருவரும் சமபங்கு கொள்வோம். நம்முடைய நட்பு என்றும் இருப்பதாக" என்று பிரமாணம் எடுத்துக் கொள்கிறார்கள். குகனுடன் ஐவரான ஸ்ரீராம லக்ஷ்மண சகோதரர்கள் சுக்ரீவன் வரவால்



அறுவராகிறார்கள்.

அடுத்து ஸ்ரீராமனின் சகோதரத்துவத்துக்கு மேலும் ஒரு காட்சி. யுத்த காண்டத்தில் ஸ்ரீராமர் அரக்கர்களுடன் போர் தொடுத்துக் கொண்டிருந்த வேளையில் இராவணனால் அவமானப் படுத்தப்பட்ட "விபீஷணன்" சுக்ரீவனிடம் வந்து இராவணன் செய்யும் செயல்களில் தனக்கு விருப்பம் இல்லை என்றும் அதனால் ஸ்ரீராமபிரானிடத்தில் "சரணாகதி" அடைய விரும்புவதாக தெரிவித்தான். ஸ்ரீராமர் இதில் முடிவு எடுப்பதற்கு முன் எல்லோரிடமும் அபிப்ராயங்களைக் கேட்கிறார். இதற்கு லக்ஷ்மணன், சுக்ரீவன், அங்கதன் முதலியோர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். ஆனால் அனுமன் மாத்திரம் விபீஷணன் பக்கம் இருக்கும் நியாயத்தை விளக்கிவிட்டு "அண்ணலே தாங்கள் வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் தந்த விவரம் விபீஷணனுக்குத் தெரியும். அதனால்தான் தங்களிடம் சரணாகதி வேண்டி வந்திருக்கிறான்'' என்று தெரிவித்தான். இதைக் கேட்ட ஸ்ரீராமன் "அவன் நல்லவனோ, கெட்டவனோ ஒருவன் ''சரணம்'' என்று என்னிடத்தில் வந்துவிட்டால் அவன் ராவணனே ஆனாலும் ஏற்றுக் கொள்வேன். வந்திருக்கும் விபீஷணன் என் தம்பி. அவனை அழைத்துவாருங்கள்'' என்று கூற சுக்ரீவன் விபீஷணனை அழைத்து வந்து ஸ்ரீராமன் முன் நிறுத்தியதும் ஸ்ரீராமன் அவனை ஆரத்தழுவி "சகோதரர்கள் அறுவர் உன்னோடு இன்று எழுவர் ஆனோம்'' என்று கூறியதுடன் யுத்தம் முடிந்தவுடன் விபீஷணனுக்கு பட்டம் சூட்டி இலங்கையின் மன்னனாகவும் ஆக்கினார்.

ஸ்ரீராமபிரான் தன் உடன் பிறந்த சகோதரர்கள் லக்ஷ்மணன், பரதன், சத்ருக்னன் தவிர அன்புக்காகவும் பக்திக்காகவும் படகோட்டியான குகனையும், நட்புக்காக வானரனான சுக்ரீவனையும், சரணாகதிக்காக அரக்கனான விபீஷணனையும் தன் சகோதரர்களாக ஏற்றுக் கொண்டார். மனித குலத்திற்கே வழிகாட்டியாக விளங்கிய ஸ்ரீராமரின் இக்கதைகளை "ஸ்ரீராம நவமி" அன்று நாமும் படித்து நம் குழந்தைகளுக்கும் கூறி சகோதரத்துவத்தை வளர்ப்போமாக.

*ஸ்ரீராம நவமி 13.04.2019 சனிக்கிழமை*

தொகுப்பு : **டி. சூரியநாராணயன்**

# பிரதக்ஷிணம்

நம்முடைய பாரததேசத்தின் அடையாளமே கோயில்கள்தான். அதிலும் தமிழகத்தின் அடையாளம். உயர்ந்த அழகிய கோபுரங்களை உடைய கோயில்கள்தான். பெரிய பெரிய கோயில்களை எல்லாம் அந்த காலத்து அரசர்கள்தான் கட்டியுள்ளார்கள். அப்படி கட்டும்போது ஒவ்வொரு கோயிலிலும் ஏதாவது ஒன்றை தனித்தன்மையுடன் கட்டியுள்ளார்கள். பல கோயில்களில் விஞ்ஞானத்திற்கும் புரியாத பல அதிசயங்கள் நிகழ்கின்றன. தமிழகத்தில் மட்டும் 38,000 திற்கும் மேலாக கோயில்கள் இருக்கின்றன. இவற்றில் பல கோயில்களில் பல அதிசயங்கள் உள்ளன.

கோயில்களில் தெய்வங்களை வணங்கியபிறகு கோயிலை மூன்று முறை சுற்றிவருவது ஒரு மரபாகும். இதைத்தான் 'பிரதக்ஷிணம்' என்பார்கள்.

**'வேதபாரதி செய்திகள்'** வாசகர்களுக்காக மாதம் ஒரு அதிசயம் நிறைந்த கோயிலை **'பிரதக்ஷிணம்'** வர தீர்மானித்துள்ளோம்.

இந்த மாதம் "ஸ்ரீதக்ஷிண முக நந்தி தீர்த்த கல்யாணி கோவில்" அதிசய கோயிலில் பிரதக்ஷிணம் வருவோம்.

## பிரதக்ஷிணம் (6)

## ஸ்ரீ தக்ஷிண முக நந்தி தீர்த்த கல்யாணி கோவில்

## "சிவலிங்கத்திற்கு அபிஷேகம் செய்யும் அதிசய நந்தி"



பொதுவாக எல்லா சிவன் கோவில்களிலும் நந்தி தேவரின் சிலை சிவ லிங்கத்திற்கு நேர் எதிராக இருப்பதை நாம் எலலோரும் அறிந்ததே. ஆனால் இந்த "தக்ஷிண முக நந்தி தீர்த்த



கல்யாணி கோவிலில் நந்தி சிவனின் தலைக்கு மேல் ஒரு மேடையில் அமைந்துள்ளது. அது மாத்திரமல்ல இந்த நந்தியின் வாயிலிருந்து தொடர்ந்து வந்துக்கொண்டிருக்கும் தண்ணீர் தாரா அபிஷேக பாத்திரத்தில் விழுந்து அதிலிருந்து சிவலிங்கத்திற்கு அபிஷேகமாக விழுந்து பிறகு அந்த தீர்த்தம் எதிரே உள்ள கோவில் குளத்தில் கலக்கிறது.

இந்த அதிசய கோயில் கர்நாடக மாநிலம் மல்லேஸ்வரம் என்ற ஊரில் உள்ளது. இது சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது என்று ஆராய்ச்சியில் தெரிய வந்ததுள்ளது. இந்த கோயிலை "நந்தி தீர்த்தா" என்றும் அழைக்கிறார்கள்.

நந்தியின் வாயிலிருந்து வரும் தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்பதை இதுவரை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

இந்த தண்ணீரில் அபூர்வ சக்தி இருப்பதாகவும் இதை பருகினால் தீராத நோய்களும் தீரும் என்று பக்தர்கள் நம்புகிறார்கள். இதை "தீராத நோய் தீர்க்கும் தீர்த்தம்" என்றே அழைக்கிறார்கள். இதனால் இந்த கோயிலில் எப்போதும் பக்தர்கள் கூடி இருப்பார்கள்.

வாழ்க்கையில் ஒரு முறையாவது இந்த கோயிலுக்குச் சென்று வர வேண்டும்.

பிரதக்ஷிணம் தொடரும்...

தொகுப்பு : **டி. சூரியநாராயணன்**

## அன்பரின் வேண்டுகோள்!

நமஸ்காரங்கள், ஸ்ரீ மஹா பெரியவாளுக்கு அனந்தகோடி நமஸ்காரங்கள். வேதபாரதி ஊரப்பாக்கம் குழு தனது செயல்பாடுகளை தொடர்ந்து நல்லவிதமாகவும், நற்பணிகளையும் ஆக்கபூர்வமாக செய்துவருகிறது. அநேக ஆன்மீகம் சார்ந்துள்ள மக்களின் ஹ்ருதயத்தில் நல்ல பெயர் பெற்றுள்ளது. வாட்ஸ் அப்பில் வரும் கருத்துக்கள் புதுமையும், பழமையும் கலந்து ஹிந்து கலாச்சாரத்தின் தர்மத்தின் குரலாக உள்ளது. மாத இதழ்களிலும் அதன் இறைப்பணி தொடர்வது பாராட்டுக்குறியது. என்னுடைய கருத்துக்களை தாழ்மையுடனும், பணிவுடனும் பகிரவிரும்புகிறேன். ஸந்த்யா வந்தன பயிற்சி, ஸ்ரீ ருத்ரம் பயிற்சி, ஸ்லோகம் பயிற்சி ஈடுபாடு கொண்ட தங்களிடம் நமது ஊரில் லலிதா ஸஹஸ்ரநாமம், விஸ்ணு ஸகஸ்ரநாமம், பாராயணங்களையும் தொடர்ந்து பாராயணம் செய்ய வழக்கப்படுத்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி!

**கோதண்டராமன், ஊரப்பாக்கம்.**

## ஸ்துதிகள்

**'ஸ்துதிகள்'** என்பது இறைவனின் பலவித தெய்வீக அம்சங்களை புகழ்ந்து பாடும் பாடல்களாகும். ஏராளமான புராணங்களிலும் மற்ற நூல்களிலும் ஸ்துதிகள் உள்ளன. ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஸ்துதிகளிலிருந்து மாதம் ஒரு ஸ்துதியை வாசகர்களுக்காக ''ஸ்துதிகள்'' என்ற இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம்.

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய

### 6. 'முசுகுந்த ஸ்துதி'

கம்ஸனுடைய மரணத்திற்குப் பிறகு அவனுடைய மனைவியர் இருவரும் மதுராவில் இருக்கவில்லை. அவர்களுடைய தந்தையான "ஜராசந்தன்'' - னிடம் சென்றுவிட்டார்கள். ஸ்ரீ கிருஷ்ணனால் கம்ஸன் கொல்லப்பட்டதை கேட்ட "ஜராசந்தன்'' கோபம் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனையும் அவருடைய யாதவ குலத்தையும் அழிக்க படை எடுத்துச் சென்றான். அவனுக்கு உதவியாக ''காலயவன்'' என்ற அசுரனும் படை எடுத்துச் சென்றான். காலயவனுக்கு பயந்து ஓடுவது போல் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் ஓடி ஓடி ஒரு குகையில் புகுந்து மறைந்துவிட்டார். காலயவனும் அந்த குகையில் நுழைந்து அங்கு தூங்கிக் கொண்ருந்த "முசுகுந்த சக்ரவர்த்தி'' யை கிருஷ்ணன் என்று நினைத்து தன் காலால் உதைத்தான். திடுக்கிட்டு எழுந்த "முசுகுந்தன்'' தன்னுடைய தவ வலிமையால் கண் விழித்து காலயவனை பார்த்ததும் அவன் சாம்பலாகிவிட்டான். இக்ஷுவாகு வம்சத்தில் பிறந்த "மாந்தாதா'' வின் பிள்ளைதான் "முசுகுந்தன்'' பிறகு "முசுகுந்தன்'' குகையில் ஒரு ஒளியைக் கண்டான். அதில் பகவான் அவனுக்கு தன் விஸ்வரூபத்தைக் காட்டினார். முசுகுந்தன் மெய்சிலிர்த்து பகவானை பலவாறு தொழுதான். அவன் பகவானைத் தொழுததுதான் இந்த "முசுகுந்த ஸ்துதி''.

*(அஸ்கந்தம் 10 - அத்தியாயம் 1 - ஸ்லோகங்கள் 6 முதல் 58 - 13 ஸ்லோகங்கள்)*

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**



## 3. சுபாஷிதம்

''சுபாஷிதம்'' என்பது சொல்வதற்கு இனிமையான ஸ்லோகங்கள். சம்ஸ்கிருத பாடம் கற்றுக்கொள்ளும் போது இத்தகைய சிறு சிறு ஸ்லோகங்களை கற்றுத்தருவார்கள். இந்த வகையான ஸ்லோகங்கள் சொல்வதற்கு கம்பீரமானதாகவும் அந்த மொழியின் மீது ஒரு பிடிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தும் என்பது மறைபொருளாக இருந்தபோதிலும், இத்தகைய ஸ்லோகங்களின் பொருள் எவரையும் கவறும். சிறு குழந்தைகளுக்கு இத்தகைய நல்லுரைகளை கற்றுத்தருவதால் எதிர்காலத்தில் அந்த மாணவனின் மனவளம் செம்மையாக அமைவதோடு அவன் பலருக்கு வழிகாட்டியாக எடுத்துக்காட்டாக விளங்குவான்.

**1. சத்யம் மாதா பிதா ஞானம்**
**தர்மோ ப்ராத தயா சகா**
**சாந்திஹ் பத்னீ க்ஷமா புத்ரஹ**
**ஷடேதே மம பாந்தவஹ**

பொருள் : சத்யமே தாய்; ஞானமே தந்தை; தர்மமே சகோதரன்; கருணையே நண்பன்; அமைதியே மனைவி; மன்னிப்பே மகன் என்று எனக்கு இவர்களே ஆறு உறவினர்கள்.

**2. த்ருதி : க்ஷமா தமோஸ் தேயம்**
**ஷௌசம் இந்திரிய நிக்ரஹ**
**தீர் வித்யா ஸத்யமக்ரோதஹ**
**தசகம் தர்ம லக்ஷணம்**

பொருள் : உறுதி, பொறுமை, அடக்கம், தனக்குரியதல்லாத பொருளை ஏற்காமலிருப்பது, தூய்மை, புலனடக்கம், அறிவுக்கூர்மை, கல்வியறிவு, உண்மை, கோபப்படாமலிருப்பது ஆகிய பத்தும் தர்மத்திற்கு இலக்கணமான பத்து பண்புகள்.

**3. அக்னி : சேஷம் க்ருணா; சேஷம் ஷத்ரு; சேஷம் ததைவ ச**
**புன: புன: ப்ரவர்த்தேத தஸ்மாத் சேஷம் ந கார்யேத்**

பொருள் : நெருப்பு, கடன், பகை இம்மூன்றும் சிறிது எஞ்சினாலும் மீண்டும் வளரும். ஆகவே முற்றிலுமாய்த் தீர்க்கப்பட வேண்டும்.

தொடரும்....

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

*என்றும் ஆன்மீக பணியில் :*
**பிரம்மஸ்ரீ முனிஸ்வர ஸாஸ்திரிகள்**
*ஸ்தாபகர் ஸ்ரீ வித்யா ஸ்தானம் ட்ரஸ்ட், சென்னை.*

## வாசகர் கடிதம்

நான் வேதபாரதி செய்திகள் மாத இதழை நீண்ட காலமாக படித்து வருகிறேன். நல்ல விஷயங்கள் பல உள்ளன.

பட்டினத்தார் தன் தாய் இறந்ததும் பத்துப் பாடல்களை பாடியுள்ளாராம். அவைகளை வேதபாரதி இதழில் வெளியிட வேண்டுகிறேன்.

**ஜி.ஜெயராமன்**

மண்ணிவாக்கம், சென்னை

வாசகர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்வதே "வேதபாரதி இதழின்" நோக்கம் வாசகருக்காக இதோ இந்தப் பாடல் :

ஆசிரியர்.

பட்டினத்தார் தன் தாயிடம் "தாயே நான் எங்கிருந்தாலும் ஓடி வந்து உன்னுடைய ஈமச்சடங்குகளை செய்வேன்" என்று வாக்களித்திருந்தார். தாயின் மரணச் செய்தியைக் கேட்டு சரியான நேரத்தில் இடுகாட்டிற்கு வந்து தன் தாயின் உடல்மீது உறவினர்கள் அடுக்கியிருந்த விறகுகளை அகற்றி பச்சை வாழை மட்டைகளை அடுக்கி பத்துப்பாடல்கள் பாடி சிதைக்குத் தீயிட்டார்.

1. ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

2. முந்தித் தவம் கிடந்து முன்னூறு நாள்சுமந்தே
அந்திபகலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
ஏரியத் தழல் மூட்டுவேன்.

3. வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டிய தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமுட்டு வேன்.



4. நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்த்தெடுத்துத் தாழாமே அந்திபகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றிய தாய்தனக்கோ
மெய்யிலே தீமூட்டு வேன்.

5. அரிசியோ நானிடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிகையிட்டுப் பார்த்து மகிழாமல் உருசியுள்ள
தேனே திரவியமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு

6. அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே எனஅழைத்த வாய்க்கு

7. முன்னை இட்ட தீ முப்புறத்திலே
பின்னை இட்டதீ தென்இலங்கையில்
அன்னை இட்டதீ அடி வயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்கமூள்கவே


8. வேகுதே தீயதனில் வெந்து பொடி சாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கரதி வளர்த்தெடுத்த கை

9. வெந்தாளோ சோணகிரி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ சந்ததமும்
உன்னையே நோக்கி உகந்து வரம் கிடந்து என்
தன்னையே ஈன்றெடுத்த தாய்.

10. வீட்டிருந்தாள் அன்னை வீதிதனில் இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள் பால்தெளிக்க
எல்லோரும் வாருங்கள் ஏதென்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

## சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை

# நடத்தையிலும் மனநிலையிலும் சமமாய் இருத்தல்



ஒருவர் தான் ஏற்பாடு செய்திருந்த ஒரு பெரிய விருந்திற்கு உறவினர்களையும், நண்பர்களையும் அழைத்திருந்தார். விருந்திற்கு வந்தவர்களுள் ஒருவர் சரியான சாப்பாட்டுப் பிரியர். அதே சமயம் சொற்ப உணவையே உண்ணும் ஒரு குழந்தையும் விருந்தில் கலந்து கொண்டது. ஒரு விருந்தாளிக்கு இனிப்புப் பண்டங்கள் மிகவும் பிடிக்கும். ஆனால், மற்றொருவர் அவற்றை வெறுத்தார். விருந்தளிப்போன், ''எனது விருந்தாளிகளிடம் நான் பாரபட்சமாக நடந்து கொள்ளக் கூடாது. ஆகையால், நான் எல்லோருக்கும் ஒரே அளவாகத்தான் உணவைப் பரிமாற வேண்டும். அதுதான் சமத்துவமாகும்'' என்று நினைத்தார். அதன் விளைவாக, விருந்தின் முடிவில், சாப்பாட்டுப் பிரியர், ''ஏன் இவர் என்னை விருந்திற்கு அழைத்துவிட்டுப் பசியோடு திருப்பி அனுப்புகிறார்?'' என்று முணுமுணுத்தார். உணவை வீணாக்கக்கூடாது என்று சொல்லிக் கொடுத்திருந்ததால், அக்குழந்தை இலையில் பரிமாறியதை எல்லாம் ஒன்றுவிடாமல் சாப்பிட்டது. அதனால் அதன் வயிறு பருத்து, அது வயிற்று வலியால் மிகவும் அவதிப்பட்டது. இனிப்புப் பக்ஷணங்களை வெறுத்தவரோ, ''நான் வேண்டாமென்று சொல்லியும் கேட்காமல், எதற்காக இவர் எனக்கு அந்த இனிப்பை மூன்று தடவை பரிமாறினார்?'' என்று சிடுசிடுத்தார். விருந்திற்கு வந்திருந்த அனைவருக்கும் இப்படி



ஏதோ ஒரு குறை இருந்தது.

மாறாக, வேறொரு விருந்தளிப்போன், தான் அழைத்திருந்த விருந்தினர்கள் ஒவ்வொருவரின் விருப்பத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்டு, அதற்கேற்றவாறு உணவைப் பரிமாறினார். விருந்தினர்களின் பசிக்கும் ருசிக்கும் ஏற்றவாறு அவர் உபசரித்ததால், விருந்துக்கு வந்திருந்த அத்தனை பேரும் தங்கள் பசியாறி சந்தோஷத்தோடு வீடு திரும்பினார்கள்.

கேளிக்கைக்காக மக்கள் நாட்டிய அரங்கத்திற்கு செல்வார்கள். ஆனால் எல்லோருக்கும் ஒரே மாதிரியான ருசியிருக்காது. ஒருவருக்கு வீர ரசம் பிடித்திருக்கும்; அவர் கர்ணனுடைய பாத்திரத்தை மிகவும் விரும்பிப் பார்ப்பார். அவர் பிஷ்மராய் நடிப்பவரின் சாந்தமான நடிப்பை மிகவும் பாராட்டுவார். இருப்பினும், பல தரப்பட்ட பார்வையாளர்களின் சந்தோஷம் மட்டும் ஒன்றாகவே இருக்கும்.

தர்மத்தைக் கடைப்பிடித்து அதர்மத்தைக் கைவிட வேண்டுமென்று நமது சாஸ்திரங்கள் ஒருவனுக்கு இடைவிடாது அறிவுறுத்துகின்றன. உதாரணத்திற்கு, கிருஷ்ணர் அர்ச்சுனனிடம் "தனது கடமையை சரியாக ஆற்றுவதின் மூலம் ஒருவன் வெற்றியை அடைகிறான்" என்று கூறுகிறார்.

- தொடரும்...

வேதபாரதி இதழில் வரும் கட்டுரைகள் குறித்தும், செய்திகள் குறித்தும் வாசக அன்பர்கள் தங்களுடைய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கடிதங்கள் மூலமாகவோ அல்லது ஈ மெயில் மூலமாகவோ தெரிவித்தால் நல்ல ஆலோசனைகளை ஏற்று இதழை இன்னும் சிறப்பாக வெளியிட எங்களுக்கு ஏதுவாக இருக்கும். உடனே உங்களின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் எழுதி அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி

**வேதபாரதி - ஆர். வெங்கட்ராமன்**

எண்.31, சேஷாத்திரிபுரம் 1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை – 600 042.

Cell : 94434 95950
Email - vedabharathichennai@gmail.com

# பௌர்ணமி ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பூஜை

*20.03.2019 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணி முதல் 5.30 மணி வரை வேதபாரதி மற்றும் மஹா மேரு மண்டலி இணைந்து நடத்திய ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குங்கும அர்ச்சனை மற்றும் பாராயணம் சிறப்பு பௌர்ணமி பூஜை மேற்கு மாம்பலம் கோதர்மசாலா வளாகத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது. மாலை 3.45 மணி முதல் 150க்கும் மேற்பட்ட பெண்கள் பாரம்பர்ய உடையுடன் குழும தொடங்கினார்கள். 4.00 மணிக்கு வேதபாரதி சார்பில் வரவேற்பும், குறிப்புகளும், வேதபாரதி நோக்கம் குறித்தும் ஆர். வெங்கட்ராமன் கூறினார். கோதர்ம சாலா சார்பாக ப்ரத்யேகமாக மழை வேண்டி சிறப்பு ஸங்கல்பம் செய்து ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் தொடங்கப்பட்டது. 4.40 மணிக்கு ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம குங்கும அர்ச்சனை சிறப்பாக நடந்தது.*

*எல்லா மகளிருக்கும் தாம்பூல தட்சணை ப்ரசாதம் வழங்கியதில் வேதபாரதி மகளிர் குழுவினர் மகிழ்ச்சி அடைந்தனர். எல்லா மகளிர் பெருமக்களுக்கும் ப்ரசாத உணவு கோதர்மசாலா நிர்வாகிகளால் அளிக்கப்பட்டது. கோதர்மசாலா டிரஸ்டிகளும் உறுப்பினர்களும் தங்களது ஒத்துழைப்பை நல்கினார்கள். இப்புனிதப் பணியில் பங்கு கொண்டதில் வேதபாரதி மகளிர் குழுவும், உறுப்பினர்களும் பெரும்பேறு பெற்றார்கள். எல்லோரும் எல்லா நலனும் பெற்று வாழப்பிரார்த்திக்றோம்.*

-ஆசிரியர்.






# என்றும் எங்கள் நினைவில் வாழும் பூர்ண புருஷர்





**திருப்பூர் பிராமண சமூகத்தின் முதுபெரும் தலைவரும்**

**வேதபாரதி அமைப்பின் ஸ்தாபகர்**

Auditor **ஸ்ரீ.T.R. ராமநாதன் அவர்களின் தந்தையுமான -**

**Tiruppur Senior Chartered Accountant**

**திரு.N.ராமச்சந்திரன் FCA., அவர்கள்**

**18.03.2019 திங்கள்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் சிவலோக ப்ராப்தி அடைந்தார்கள்.**

**வேதபாரதி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி கிளைகள் சார்பாக எங்களது சிரத்தாஞ்சலியை சமர்ப்பிக்கிறோம்.**





V.KRISHNAMOORTHY
Managing Trustee

# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000ம் ஆண்டு முதல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வரும் ஏழை புற்றுநோயாளிகளின் ஒரே புகலிடம்**



P.AKASHRAM
Executive Trustee

**ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வகிக்கும் தர்மசாலா** - ஒரு அறக்கட்டளை அல்லது தர்ம ஸ்தாபனம் மட்டுமல்ல; எண்ணற்ற "ஏழை புற்றுநோயாளிகளின் உயிர்களை புதுப்பிக்கும் கருவறை"யாகவும் திகழ்கிறது.

அடையாறு புற்றுநோய் மருத்துவமனை - ஸ்ரீ காஞ்சி ஜெயேந்திர சரஸ்வதி சங்காராச்சார்ய ஸ்வாமிகள் - ஸ்ரீ மாதா டிரஸ்ட் இம்மூவருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் தர்மசாலாவை நிர்வகிக்கும் பொறுப்பினை ஸ்ரீ மாதா டிரஸ்ட் ஏற்றுக் கொண்டது. அது முதல் கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக வரும் ஏழை புற்றுநோயாளிகள் தர்மசாலாவில் தங்கவைக்கப்பட்டு தாயுள்ளத்துடன் பராமரிக்கப்படுகிறார்கள்.



ஸ்ரீ மாதா டிரஸ்ட் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்பு ஸ்ரீ காஞ்சி பெரியவர் தர்மசாலாவிற்கு விஜயம் செய்தார். அச்சமயம் மருத்துவர் சாந்தா அம்மையார், திரு.லட்சுமணன் ஆகியோர் உடனிருந்தனர்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னால் ஏழை புற்று நோயாளிகளின் பயன்பாட்டிற்காகவே பிரத்யேகமாக, முற்றிலும் ராஜஸ்தான் தனவந்தர்களின் நிதியினைக் கொண்டு பெரும் பொருட்செலவில் நிர்மாணிக்கப்பட்டாலும், ஏற்று நடத்திட எவரும் முன்வராத நிலையில் இந்த தர்மசாலா பயனற்றதாகவே இருந்து வந்தது. காரணம் தர்மசிந்தனை மட்டுமன்றி ஏழை புற்று நோயாளிகளுக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்வதற்கு யாரும் தயாராக இல்லை என்பதுதான்.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலையில் கேன்சர் மருத்துவமனை தலைவர் டாக்டர் சாந்தா அம்மையார் அவர்கள், ஸ்ரீ காஞ்சி பெரியவரை அணுகி, ஏழை புற்றுநோயாளிகளுக்காக நிர்மாணிக்கப்பட்டு, பயன்பாட்டிற்கு வராத நிலையில் இருக்கும் தர்மசாலாவினை திறம்பட நிர்வகிக்கக் கூடிய மனிதநேயம் மிக்க ஒருவரை கண்டறிந்து, அவரிடம் ஏழை புற்றுநோயாளிகளை காத்திடும் இம்மாபெரும் பொறுப்பினை ஒப்படைக்குமாறு வேண்டிக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீ காஞ்சி பெரியவர், சாந்தா அம்மையாரிடம் "ஏழை புற்றுநோயாளிகளுக்கு உதவத்தானே வேண்டுகிறாய்; கவலை கொள்ள வேண்டாம்; சரி செய்து விடலாம்" என்று அருளினார். அக்கணம் ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் மனதில், இம்மா



பெரும் பொறுப்புக்கு உகந்தவராக நிழலாடியவர், ஸ்ரீ காஞ்சி பெரியவர்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரிய திரு.கிருஷ்ணமூர்த்தி என்பது காலச்சுவடுகளில் பொறிக்கப்பட வேண்டிய, எவராலும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மை.

இந்நிலையில் ஸ்ரீ காஞ்சி பெரியவர் மீது மாறாப்பற்றும், மனிதநேயத்தின் மறு உருவமாகவும் திகழும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷனில் பணி புரிந்து வந்த கிருஷ்ணமூர்த்தி அவர்களை, ஸ்ரீ காஞ்சி பெரியவர் அழைத்து "ஐ.ஓ.சி. வேலையை விட்டுடு; அதை விடப் புண்ணிய கார்யமான ஏழை புற்று நோயாளிகளை காப்பாத்துற பொறுப்பை நீ ஏத்துக்கோ" என்று ஆணையிட்டார். மேலும், ஸ்ரீ காஞ்சி பெரியவர் அவர்களே ஸ்ரீ மாதா டிரஸ்ட் என்ற பெயரையும் தேர்வு செய்து ஆசி வழங்கினார். அவரின் வழி காட்டுதல் படியே மேற்கூறிய புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த 2000ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.

அன்றிலிருந்து கேன்சர் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தால் எங்கு தங்குவது, எங்கு சாப்பிடுவது, நமக்கு உதவி செய்திட சென்னையில் யார் இருக்கிறார்கள்? என்று தங்களது இயலாமையினாலும், உயிர்க்கொல்லும் வேதனை தரக்கூடிய புற்று நோயாலும் தத்தளித்துக் கொண்டிருந்த ஒரு பாவமும் அறியாத ஏழை புற்று நோயாளிகளின் வாழ்க்கையில் புது வெளிச்சம் பரவத் தொடங்கியது.

நமது தர்மசாலாவில் ஏழை புற்று நோயாளிகள், நோயாளிகளாக இல்லாமல் விருந்தினர்களாக பராமரிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு வேறெங்கும் கிடைத்திராத அன்பும், அரவணைப்பும் மடை திறந்த வெள்ளமாய் தங்கு தடையின்றி கிடைத்துக் கொண்டிருக்கிறது.

நமது தர்மசாலாவில் ஏழை புற்று நோயாளிகள்; அவர்களுக்கு துணையிருப்பவர்கள் என ஒவ்வொரு நாளும் 250 முதல் 300 பேர் இருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான, சுகாதாரமான தங்குமிடம்; சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்; மூன்று வேளையும் புற்றுநோயின் சிகிச்சைக்கு ஏற்றவாறு அனைத்து சத்துக்களையும் உள்ளடக்கிய முழுமையான, சுவையான, சைவ உணவு; காபி/டீ/பால்/சத்துமாவுகஞ்சி/வேகவைத்த சுண்டல் முதலியன நாள் தவறாமல் சிகிச்சை காலம் முடியும் வரை **முற்றிலும் இலவசமாக** வழங்கப்பட்டு வருகிறது.

பண்டிகை காலங்களில் புத்தாடைகள் மற்றும் விருந்து உணவு, நோயாளிகளுக்குத் தேவையான மருந்து



புற்றுநோய் பூரணமாய் குணமாகும். விரைவில் வீடு திரும்பி குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழலாம் என்கிற நம்பிக்கை தர்மசாலாவில் கிடைக்கப் பெற்றதால் நிம்மதியாக மதிய உணவு உட்கொள்ளும் ஏழை புற்றுநோயாளிகள்.

மாத்திரைகள் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படுகிறது.




வறுமை எந்த ஒரு ஏழை புற்று நோயாளியின் சிகிச்சைக்கும் தடையாக இருக்கக் கூடாது என்பதே ஸ்ரீ மாதா டிரஸ்டின் தலையாய நோக்கமாகும். இந்த உயரிய நோக்கம் இன்று வரை மனிதநேயமிக்கவர்களாலும், தர்மசிந்தனை கொண்டவர்களாலும் சற்றும் சிதையாமல் தர்மசாலாவில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது.

எளியவர்களான ஏழை புற்றுநோயாளிகளின் உயிர்களை காத்திட, உங்களைப் போன்ற எண்ணற்ற உயர்ந்த உள்ளங்கள் இன்றளவும் துடித்துக்கொண்டு இருக்கின்றன என்றால் அது மிகையல்ல.

**ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவளிக்க உதவிடுங்கள்.**

**நமக்கும் நமது சந்ததியினருக்கும் காலத்தால் அழியாத புண்ணியத்தை சேர்த்திடுங்கள்.**

"நம்மைக் காட்டிலும் உலக நன்மையே பெரிது" என்ற பொதுநலம் அனைவருக்கும் உண்டாக வேண்டும்.
ஸ்ரீ காஞ்சி மஹா ஸ்வாமிகளின் அமுத வாக்கு.



தங்களது நன்கொடையை **Sri Matha Trust** என்ற பெயரில்
காசோலை / வங்கி பணப்பரிவர்த்தனை (NEFT) / பணம் / மனியார்டர் மூலமாகவோ செலுத்தலாம்

ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
ரூ.25,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவை ஏற்கலாம்
ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்
ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவின் ஒரு பகுதி அல்லது
ரூ.3,000/- நிதியளித்து காலை உணவின் ஒரு பகுதியை ஏற்கலாம்

You are welcome to send your contribution to

| Account Name | Bank Name | Branch |
|---|---|---|
| SRI MATHA TRUST | INDIAN OVERSEAS BANK | GANDHI NAGAR, CHENNAI-20 |
| Current A/c No. : 163502000001090 | | IFSC Code : IOBA0001635 |

You may also deposit your donation in any IOB Branch for crediting into our account.
After doing this benevolent act kindly SMS your postal mailing address or e-mail the donation details to enable us send our receipt.

Sri Matha Trust, Rajasthani Dharmasala, Old Cancer Institute Premises, Gandhi Nagar Canal Bank Road, Adyar, Chennai - 600 020. Tel: 044-2442 0727
Mobile: 94440 01065, 93810 20727, 90032 47857 Email: vkrishnamoorthy.smt@gmail.com
Regd. Office: "Natha Kamalam" 1-A, Periyazhwar Street, Sundaram Colony, East Tambaram, Chennai - 59.



உ
குருவே சரணம்

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

## இல்லத்தரசிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு

1. இளம் சிறார்களுக்கு நன்னெறி வகுப்புகள் நடத்திட
2. 7ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கல்வி பயிலும் பெண் குழந்தைகளுக்கு சமூக வலைதளங்கள் தொடர்பாக விழிப்புணர்வு வகுப்புகள் நடத்திட, தன்னம்பிக்கை வாழ்வியல் கல்வி கற்றுக் கொடுக்க, விருப்பமுள்ளவர்கள் பயிற்சி பெற விண்ணப்பிக்கலாம்.
3. பதிவு செய்யும் பெண்களுக்கு (வயது வரம்பு 40க்குள்) பயிற்சி வகுப்புகள் இலவசமாக கற்றுக் கொடுக்கப்படும்.
4. வேதபாரதி ஏற்பாடு செய்யும் நிகழ்ச்சிகளுக்கு வகுப்புகள் நடத்தினால் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புக்கு :
**9443495950 / 99949 26537**
**Email : vedabharathichennai@gmail.com**

செங்கல்பட்டு அருகிலுள்ள சிவாலயத்திற்கு
பூஜை செய்ய பூஜை முறை தெரிந்த அந்தணர் தேவை.
**மாத சம்பளம் ரூ.12,000/-**
வீடு மற்றும் உணவுக்குத் தேவையான ஏற்பாடு செய்யப்படும்.
தொடர்புக்கு :
**9443495950 / 9790920672**

**வேதபாரதி செய்திகள் வாசகர்களுக்கு**
**ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷ**
**புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**குறிப்பு :**
**வேதபாரதி செய்திகள் புத்தகம் பிரதிமாதம் 12ம் தேதிக்குள் தங்களுக்கு தபால் மூலம் கிடைக்கவில்லை என்றால் 9443495950 / 9445102193 என்ற கைபேசி எண்ணிற்கு தங்கள் முகவரி, பின் கோடு மற்றும் தொலைபேசி எண்ணை SMS செய்யவும். உடன் தபாலில் அனுப்பி வைக்கிறோம்.**

**- வேதபாரதி**

ஓம்

**பூஜ்ய ஸ்ரீ தயானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள்**

**நிறுவனர்**

**பூஜ்ய ஸ்ரீ ஓங்காராநந்த ஸ்வாமிகள்**

**தலைமையில் இயங்கும்**

**பாரதீய அறநெறிப் பயன்பாட்டுக் கல்வி மையம்**
**திருவண்ணாமலை**
**(தாய் அமைப்பு : தர்ம ரக்ஷண ஸமிதி, தமிழ்நாடு)**

# இல்லந்தோறும் இராமாயணம்

ஓர் எளிய அறிமுகம்

(அஞ்சல் வழி ஓராண்டுச் சான்றிதழ் படிப்பு)

கல்வி அர்ப்பணத் தொகை : ரூ.600/-

**ஸ்ரீமத் இராமாயணத்தின் மூலம் நம் ஹிந்து தர்மத்தை அறிய ஓர் அரிய வாய்ப்பு**

பெற்றோர் பக்தி பெருகிட, ஸஹோதர பாசம் பரவிட, லக்ஷிய ஆணும் (ராமன்) லக்ஷிய பெண்ணும் (ஸீதை) உருவாகிட, பொறுமை வடிவாம் மனைவி பெற்றிட, நல்லதொரு குடும்பம் அமைந்திட, ஸேவைத் தொண்டன் ஆகிட, தேச பக்தி பொங்கிட, இன்றையச் சூழலில் உடனடித் தேவை இராமாயணமே, வால்மீகி இராமாயணத்தின்படி ஏழு (7)காண்டங்களுக்கானக் கதைகள் புத்தகங்களாக வெளிவரும். ஒவ்வொரு காண்டத்திற்கானப் புத்தகம் பெற்றிடும் முன்பும்

**ஸ்ரீராம நாம லகித ஜப புத்தகம் எழுத அரிய வாய்ப்பு.**

**பாரதீய அறநெறிப் பண்பாட்டுக் கல்வி மையம்**

சுத்தானந்த ஆச்ரமம், 36, கிரிவலப் பாதை,
அடி அண்ணாமலை, திருவண்ணாமலை - 606 604.
தொலைபேசி : 04175 - 232153
அலைபேசி : 95000 82794
மின்னஞ்சல் : cbdcstn@gmail.com



உ
குருவே சரணம்

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# ஸந்த்யா வந்தன பயிலரங்கம்

**நாள் : 24, 25 ,26 மே 2019 வெள்ளி, சனி, ஞாயிறு**

**இடம் : ஸ்ரீ விட்டல் ருக்மணி ஸமஸ்தான் வளாகம், கோவிந்தபுரம்**

1. உபநயனம் ஆன அந்தண சிறுவர்கள், பெரியவர்கள் கலந்து கொள்ளலாம்.
2. 23.05.2019 வியாழன் இரவுக்குள் கோவிந்தபுரம் வரவேண்டும்.
3. முன்பதிவு அவசியம்.
4. தங்குமிடம், உணவு, பாதுகாப்பு ஏற்பாடு உண்டு
5. மூன்று நாட்களும் தங்க வேண்டும்.
6. எல்லா ஸாகைகளுக்கும் ஆசிரியர்கள் உண்டு.
7. ஸ்மார்த்த, வைஷ்ணவ, மாத்வ, சிவாச்சார்யர் எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் வகுப்புகள் உண்டு.
8. தினசரி ஸந்த்யா வந்தனம், ஸமிதாதானம், உடற்பயிற்சி, பஜன்-யோகா, ஆன்மீகப் பெரியவர்களின் ஆசியுரை.
9. கலந்து கொள்ளும் ப்ரம்மசாரி குழந்தைகளுக்கு போக்குவரத்து செலவு ஏற்றுக்கொள்ளப்படும்.
10. கும்பகோணம் - ஆடுதுறை மார்க்கத்தில் கோவிந்தபுரம் உள்ளது.
11. தங்களுக்கு தேவையான வஸ்திரம், பஞ்சபாத்ரம், தாம்பாளம் கொண்டு வர வேண்டும்.

*முன்பதிவிற்கு :*

**9443495950 / 99949 26537**

**Email : vedabharathichennai@gmail.com**

**Team Members :**

Sri. Raviji (Sri vittal Rujmani Samasthan) - 98800 27910
Sri. Venkatesa Vathyar - 82483 82567
Sri. Ramakrishnan LIC - 99949 26537

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி** பாகம் - 2 பகுதி - 32

தோல்வி என்பது எதிர்மறை எண்ணங்களை ஏற்படுத்தும். அதனால் குழந்தைகளுக்கு தோல்வியை எப்படி சமாளிப்பது என்று மட்டும் கற்றுக் கொடுத்தால் போதாது, அதனோடு இணைந்து நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளும் திறனையும் கற்றுத்தர வேண்டும்.

*"நயன் ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று*
*பண்பின் தலைப்பிரியாச் சொல்"*

*(அதிகாரம் - 10 - இனியவை கூறல். குறள் எண்:97)*

பிறருக்கு நன்மை வர வேண்டும் என்று எண்ணுவது தான் நல்ல எண்ணம். பிறருக்கு நன்மை உண்டாகும்படி பேசுவது என்பது பண்பு கெடாதபடி, இனிய வார்த்தைகளை பேசுவது என்பதாகும். அப்படி பேசுகின்றவனுக்கு அருள் நிறைந்த குணம் உண்டாகி, அவனுக்கும், அவன் மூலமாக இவ்வுலகிற்கும் நன்மை உண்டாகும்.

இரண்டே வரிகள், எட்டு வார்த்தைகளுக்குள் வள்ளுவர் "பாஸிடிவ் திங்க்" கின் முழு விவரத்தையும் அளிக்கின்றார்.

நேர்மறை எண்ணம் என்றால் கடந்து போன நிலை, இன்று வாழும் சூழ்நிலை, நாளை வரப்போகும் நிலை மூன்றையும் அலசி அதிலிருந்து நல்லதை மட்டுமே எடுத்துக் கொண்டு, அதை தனக்கும், தன்னை சுற்றியிருப்பவர்களுக்கும் நன்மை செய்ய பயன்படுத்தும் கலையாகும்.

ஒரு வெள்ளை காகிதத்தில் கறுப்புப்புள்ளி வைத்துப் பார்க்கும் பொழுது வெள்ளை காகிதம் மட்டுமே கண்களுக்கு தெரிகிறது என்று கூறுபவர்களும் உண்டு. கறுப்புப்புள்ளியை மட்டுமே காண்பவர்களும் உண்டு. இதில் யார் நேர்மறை எண்ணங்கள் கொண்டவர்கள் என்று உங்களுக்கு புரியும்.

"பாஸிடிவ் திங்கிங்" வளவ வேண்டுமென்றால் முதலில்



தன்னைப்பற்றி ஒவ்வொரு குழந்தையும் தானே புரிந்து கொள்ள எடுத்துக்கூற வேண்டும். பிறரைப் பற்றி பேசுகையில் அவர்களிடம் உள்ள நல்ல விஷயங்கள் என்ன, அதிலிருந்து நாம் என்ன கற்றுக்கொள்ள வேண்டும் என்று அலச கற்றுக் கொடுங்கள்.

இறைவன் நமக்களித்துள்ள வாழ்க்கையைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துக்கூறி, வாழ்க்கையின் அடிப்படையை அவரவர் வயதிற்கேற்ப கற்றுக் கொடுப்பது பெற்றோர்களாகிய உங்கள் கடமை.

நாம் வாழும் இவ்வுலகில் நல்லதும் உண்டு, தீயதும் உண்டு. அதைப் புரிந்து கொண்டு தன் வெற்றியை தீர்மானித்து வாழ்க்கையை நடத்த வேண்டும் என்று கற்றுக் கொடுக்க வேண்டும்.

இவற்றையெல்லாம் பெற்றோர்கள் செய்ய வேண்டும் என்றால், முதலில் அவர்களிடம் "பாஸிடிவ்" எண்ணங்கள் வேண்டும்.

"பாஸிடிவ் திங்கிங்" ஒருவர் பெற வேண்டுமென்றால் வாழ்க்கையின் ஒவ்வொரு அனுபவத்தையும் நல்லவிதமாக ஏற்றுக் கொண்டு, அதைப் புரிந்து, உணர்ந்து செயல்படுவது என்று புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் அறிவு கொண்ட, வாழ்க்கையின் மேடு, பள்ளங்களைத் தாண்டி, அதன் மூலம் நற்செயலைச் சிறப்பாகச் செய்ய வேண்டும்.

தோல்வி என்றாலே, தகுதிக் குறைவு என்று எண்ணுவதும், அதைப் பெற்ற பிள்ளைகள் மீது திணிப்பது மாபெரும் தவறு. மன ஈடுபாடு கொண்டு, முழுமையான கவனத்துடன் கூடிய செயல்கள் செய்தால் (படித்தால்) வாழ்க்கையில் வெற்றி பெற இயலும். (பரீட்சையில் வெற்றி) என்று அடிக்கடி, தட்டிக் கொடுத்துக் கூறுங்கள்.

நற்சிந்தனை தைரியத்தை அளிக்கும், வலிமை தரும். குழப்பத்தை அறவே தவிர்க்கும். மன உறுதியும், திறனும் கூடும். ஆற்றல் பெறுகி மாற்றங்களை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஆயுதம் 'பாஸிடிவ் திங்கிங்'

தொடரும்....

**காந்தலக்ஷ்மி சந்திரமௌலி.**

# தர்மத்தின் குரல்

## *அத்தியாயம் 2 : மறுபிறப்பு*

## 2.13. அடுத்த பிறவிக்குக் கர்மாக்களின் மாற்றம்

## பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்

*“ஆனால், சில சிறிய ஜீவன்கள் விஷயத்தில், எந்த வேற்றுமையும் இருப்பதாகத் தெரியவில்லையே, எடுத்துக்காட்டாக, எல்லா தேனீக்களும் முற்றிலும் ஒன்றாகவே உள்ளன. அதற்கென்ன விளக்கம் தரமுடியும்?”.*

இது சரியல்ல. தேனீக்கள் முற்றிலும் ஒன்றானவை அல்ல. அவற்றின் உடல் அல்லது மனம் சம்பந்தமான வலிமைகளில் பல வேற்றுமைகள் இருக்கும். பெண் தேனீ கருத்தரிக்கத் தயாராயிருக்கும் போது, அது வானத்தின் உயரத்தில் பறக்கச் செல்கிறது. அதை ஆண் தேனீக்கள் துரத்திச் செல்கின்றன. எல்லா தேனீக்களும், தங்களின் வலிமை, வைராக்கியம் ஆகியவற்றிக்கு ஏற்ப வெவ்வேறு உயரங்களுக்குப் பறந்து தொடர்கின்றன; வெற்றியின்றித் திரும்பி விடுகின்றன. நூற்றில் ஒன்றுதான் அந்தப் பெண் தேனீயுடன் சேர்வதில் வெற்றி பெறுகிறது. ஒரு தேனீ தீயில் விழுந்து சாகலாம். இன்னொன்று ஒரு தவளைக்கு இரையாகலாம். இன்னுமொன்று வயோதிகத்தால் இறக்கலாம். இவற்றையெல்லாம் விபத்துக்களாகச் சாஸ்திரம் கருதுவதில்லை. அவையெல்லாம் கூட அவற்றின் கர்மாக்களின் விளைவே.

*“ஆனால், சமீபத்தில் நடத்தப்பட்ட சில சோதனைகளில், சுண்டெலிகள் அவற்றின் சகோதர சகோதரிகளுடன் சேர்க்கை கொள்ளுமாறு செய்யப்பட்டன. அப்பொழுது, வேற்றுமைகள் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டே வந்தனவே, அது எப்படி?”*

மண்டெலியன் மரபுவிதிகள் (Mandelian Laws of Inheritance) என்றழைக்கப்படும் இக்கொள்கை, மற்றவர்களால் மறுக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, இதே சோதனையை நடத்திய டெக்சாஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ரோஜர் வில்லியம்ஸ் என்பவர், விருப்பங்கள், வல்லமைகள் ஆகியவற்றில் வேற்றுமைகளைக் கண்டார். அவர் அர்மடில்லோ (Armadillo) என்ற பிராணிகளைச் சோதனைக்குட்படுத்தி இன்னும் திடமான வேறுபாடுகளைக் கண்டார்.

இந்தச் சோதனையில் ஓர் ஒருயிர்செல், கருவை உருவாக்குகிறது. நாளாவட்டத்தில் அது நான்காகப் பிரிந்து, நான்கு குஞ்சுகளைத் தோற்றுவிக்கிறது. மண்டேலியன் கருத்துப்படி, அவை எல்லாம் முற்றிலும் ஒன்றாக இருக்க வேண்டும். ஆனால் ரோஜர் நிறைய வேற்றுமைகளைக் கண்டார்.

தொடரும்....



**நெரூபர் ஸ்ரீ ஸதாசிவ ப்ரஹ்மேந்திராள் ஆராதனை**
**105 ஆம் வருஷ உற்சவப் பத்திரிகை**

**தேதி : சித்திரை மாதம் 26ம் நாள் 09.05.2019 வியாழக்கிழமை**
**முதல் சித்திரை மாதம் 31ம் நாள் 14.05.2019 செவ்வாய்கிழமை வரை.**

இங்ஙனம்
நெரூர் ஸ்ரீஸதாஸிவப் பிரமேந்திர ஸபா, நெரூர் ஸத்குரு ஸதாஸிவ ப்ரம்மேந்திராள் ஸேவா டிரஸ்ட்,
நிர்வாக அங்கத்தினர்களான பக்தர்கள் / டிரஸ்டிகள்

The DD/Cheque may kindly be issued favouring -
NERUR SRI SADHASIVA BRAHMENDRA SABHA
and sent to :
THE SECRETRAY, NERUR SRI SADHASIVA BRAHMENDRA SABHA,
RADHA XEROX, NO.1, HOSPITAL ROAD, KARUR - 639 001.
CASH DEPOSITS MAY ALSO BE MADE TO : SB A/C NO.430 2500 1000 42201
KARNATAKA BANK, KARUR BRANCH, IFSC CODE : KARB0000430

**ஜாதக பரிவர்த்தனைக்கு அணுகவும் :**
எண்.9, பழனி ஆண்டவர் தெரு,
ராதாநகர், குரோம்பேட், சென்னை - 600 044.

| திருமதி. தனலட்சுமி | திருமதி. ராஜலட்சுமி |
| --- | --- |
| 9444140119 | 7092199447 |

## மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்



மஹாபெரியவா முக்காலமும் அறிந்த பரமேஸ்வரன் பெரியவாளுடன் அனேகம்பேருக்கு பலவிதமான அனுபவங்கள் ஏற்பட்டுள்ளன. தம்முடைய அடியவர்களின் வாழ்வில் நடக்கப்போவதை, நடந்ததை தம்முடைய ஞானதிருஷ்டியால் அறிந்து அவர்களை கடாக்ஷித்தவர். அதே போல் பலருக்கும் எழுந்த பலவிதமான சந்தேகங்களை யாராலும் விளக்க முடியாத சந்தேகங்களை எல்லோரும் புரிந்துகொள்ளும் வகையில் அற்புதமாக விளக்கியுள்ளார். அப்படிப்பட்ட சந்தேகங்களையும் அதற்கு மஹாபெரியவா அளித்த அற்புத விளக்கங்களையும் மாதம் ஒரு விளக்கத்தை நம் வாசகர்களுக்காக இந்த பகுதியில் அளிக்கவுள்ளோம். இது பலருக்கும் அறிந்திருக்கும் இருப்பினும் தெரியாதவர்கள் தெரிந்து கொள்வதற்காக இந்த பகுதி.

### (4) ஐரோப்பியரின் சந்தேகம்

ஜே.டபிள்யூ. எல்டர் என்ற ஐரோப்பியர் ஹிந்து சமயம். பாரதப் பண்பாடுகள் குறித்து நிறை அறிந்தவர். பாரத நாட்டில் பல மகான்களையும், துறவிகளையும் தரிசித்து, வெகு நேரம் உரையாடியிருக்கிறார். அவர் சந்தித்த அனைவரும் அவருடைய ஒரு கேள்விக்கு அறிவுப்பூர்வமான பதில்களைச் சொன்னார்களே தவிர இதயபூர்வமான பதில்களைக் கூறவில்லை. ''என்னுடைய சந்தேகத்துக்கு தெளிவு கிடைக்காமலே நான் திரும்பிப்போக வேண்டியதுதானா?" என்று அவரே கேட்டுக்கொண்டிருக்கும் போது அவருக்கு மஹா பெரியவாளை தரிசிக்கும் பாக்யம் கிடைத்தது.

அவர் மஹாபெரியவாளிடம் மிகவும் பக்தியுடன் "ஸ்வாமி ஹிந்து சமயக் கோட்பாடுகளில் எந்த இரண்டு தத்துவங்களை, இன்றைய கால கட்டத்தில் அழுத்தமாக விளக்கிக் கூறி இந்த சமுதாயம் பயன்பெறச் செய்ய வேண்டும் என்று தாங்கள் விரும்புகிறீர்கள்?" என்று கேட்டார். மஹா பெரியவா நீண்ட நேரம் மௌனமாக இருந்தார். திடீரென்று அவரிடமிருந்து பதில் வெளிப்பட்டது. அவர் அளித்த விளக்கம்



"பாரதம் சுதந்திரமடைவதற்கு முன் சுமாராகப் பத்து சதவீகித மக்கள்தான் நேர்மை குறைந்தவர்களாக இருந்தார்கள். எல்லாத் தொழிலாளர்களின் பேச்சிலும் சத்தியமும் நேர்மையும் இருந்தன. கடன் கொடுத்தல், பண்டமாற்று முதலியன கூட சொற்களின் அடிப்படையிலேயே நடந்தன. பேச்சுத் தவறினால் பாவம் வந்து சேரும், நமது சந்ததியினர் துன்பப்படுவார்கள் என்ற பயம் இருந்தது. இப்போது அதெல்லாம் போச்சு. வயது வந்தவர்களுக்கு "வாக்குரிமை" என்று சட்டம் போட்டார்கள். அந்த உரிமையைக் கொடுக்குமுன் அதை அவன் எவ்வாறு உபயோகிப்பான் என்று எண்ணிப்பார்க்கவில்லை. கல்வி அறிவில்லாத ஏழை ஒருவனுக்கு இவ்வளவு முக்கியமான உரிமை கிடைத்தால் என்ன செய்வான்? என்ன செய்வானோ அது நடந்தது. வாக்குரிமை விலைபேசப்பட்து. இது முதலாவது விழ்ச்சி. அடுத்து புதிய கண்டுபிடிப்புக்களால் ஏற்பட்ட பொது நல விரோதச் செயல்கள். வருமானம் அதிகரித்துவிட்டதால் ஆடம்பரமான வாழ்க்கையில் மனம் ஈடுபடுகிறது. எது வாழ்க்கைக்குத் தேவை? எது சுகபோகம் என்ற உணர்வு மரத்துப் போய் எதைக் கண்டாலும் அனுபவிக்க வேண்டும் என்ற அசுரத்தன்மை வந்துவிடுகிறது. எளிமையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டால் அந்த வாழ்க்கை எல்லோருக்கும் நிச்சயம் கிடைக்கும். ஆனால் சுகபோகங்களை எல்லா ஜனங்களுக்கும் கிடைக்கச் செய்ய முடியுமா? அவ்விதம் கிடைக்கப் பெற்றால் நேர்மையைக் கைவிடுகிறார்கள்'' **"வாக்குத் தவறாத நேர்மையும், எளிமையுமே இரண்டு முக்கிய தேவைகள்."**

அரைமணி நேரம் வெள்ளம் போல் கொட்டி தீர்த்துவிட்டார் மஹாபெரியவா. ஐரோப்பியர் ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் திக்குமுக்காடிவிட்டார். சமுதாய நலனைப்பற்றி இவ்வளவு ஆழமாகப் பெரியவாள் சிந்தித்திருப்பது மடத்துத் தொண்டர்களுக்கும் அங்கு கூடியிருந்தவர்களுக்கும் ஆச்சர்யமாக இருந்தது.

தொகுப்பு : **டி.சூரியநாராயணன்**

# தமிழ்ப் புத்தாண்டு சங்கல்பம்

## இந்தியப் பொருளாதார உயர்வு பெண்கள் கையில்

கொஞ்சம் நம்புவதற்கு கஷ்டமாகத்தான் இருக்கும். யோசித்து, புரிந்துகொண்டு செயல்பட ஆரம்பித்தால் பெருமையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதே தலைப்பில் நான் எழுதியிருந்த கட்டுரை அமுதசுரபி பத்திரிகையில் செப்டம்பர் 2009-ல் பிரசுரமாகி, ஒரு பள்ளிக்கூட ஆசிரியை பல பிரதிகள் எடுத்து, அம்மாவிடம் கொண்டுபோய் கொடுங்கள் என்று தனது வகுப்பு மாணவ மாணவிகளிடம் கொடுத்தனுப்பிய விபரம் வாசகர்கடிதத்தில் (உளுந்தூர்பேட்டையிலிருந்து சாந்தி முத்துக்குமாரசுவாமி) பிரசுரமாகியது. அதே தலைப்பில் மிகவும் சுருக்கமாக இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

எதற்காக இப்போது இந்தக் கட்டுரை? நமது தேசத்தின் உயர்வில் நம் பங்கும் இருக்க வேண்டாமா? அதற்காக துப்பாக்கி தூக்க வேண்டாம். வெய்யில், மழை, பனியில் சிரமப்பட வேண்டாம், மனது வைத்தால் மட்டும் போதுமானது. வைப்பீர்களா? வைப்பீர்கள் என்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

அதுவும் தமிழ் புத்தாண்டு பிறக்கும் போது, தேசத்திற்கான ஒரு புதிய சங்கல்பத்தை மேற்கொள்வோம்.

நாம் உழைத்து சம்பாதிக்கும் பணத்திலிருந்து சுமார் 30 - 40 ஆயிரம் கோடி ரூபாய்கள் அந்நிய நாடுகளுக்குப் போய்விடுகிறது என்று உங்களுக்குத் தெரியுமா? எப்படி?

விளம்பரங்களைப் பார்த்து விரும்பி, மயங்கி நாம் சூப்பர்மார்கெட்டுகளிலும், ஆன்லைன் ஷாப்பிங்குகளிலம் வாங்கித் தள்ளிக்கொண்டிருக்கும் அழகு சாதனப்பொருட்கள், உணவுப் பண்டங்கள், குளிர்பானங்கள், இத்யாதிகளின் மூலம் தான்:



70-80 பைசா உற்பத்தி செலவாகும் பானங்களுக்கு (பெப்சி, கோக்ககோலா, ஸ்ப்ரைட், இத்யாதி) நாம் கொடுக்கும் விலை ரூ.10-15! இதில் பெரும்பாலான லாபம் வெளிநாட்டுக்கு!

இவைகளைவிட்டால் பானங்களா இல்லை? பழச்சாறுகள், கரும்புச்சாறு, இளநீர், மோர், லஸ்ஸி, மசாலா பால், உடல்நலத்துக்கும் கேடில்லை. நம் காசும் நம் மக்களுக்கே!.

இந்திய ஜனத்தொகையில் சரிபாதியான பெண்கள் நினைத்தால் இது, நாளையிளிருந்தே சாத்தியமாகிவிடும். ஏன் பெண்களைக் குறிப்பாகச் சொல்லுகிறேன்? நான் அறிந்த வரையில் வீட்டு உபயோகப் பொருட்களை பெண்கள்தான் தேடித்தேடி வாங்கிப் போடுகிறார்கள். இல்லை எங்கள் வீட்டில் ஆண்கள் தான் என்று இருந்தால் அவர்களை நீங்கள் ஊக்கப்படுத்துங்கள் நீங்கள் செய்ய வேண்டியது... மிகவும் எளிதானது.

1. தயவு செய்து விளம்பரத்தில் மயங்காதீர்கள்.
2. எந்தப் பொருளையும் கண்களை மூடிக்கொண்டு வாங்கிப்போடாதீர்கள். அது நம் நாட்டு உற்பத்தியா? என்று கூர்ந்து கவனியுங்கள்.
3. விதேசி பொருட்களை எரித்தது காந்தி காலத்தில் விதேசி பொருட்களை புறக்கணிப்பது இப்போது நம் கைகளில் என்பதை மறந்துவிடாதீர்கள். உங்களின் ஒவ்வொரு பைசாவும் தேசத்தின் நலனுக்குத்தான் போய் சேரவேண்டும் என்று உணருங்கள். ஜி.எஸ்.டி வரிகள் செலுத்த மூக்கால் அழுகிறோம். ஆனால் கண்களை மூடிக்கொண்ட அன்னியப் பொருள்களை வாங்கி, அயல்நாடுகளுக்கு தண்டம் அழுது கொண்டிருக்கிறோம் என்பது தெரியுமா?
4. எந்தப்பொருளையும் வாங்குவதற்கு முன்னால் அது ஆடம்பரத்துக்கா, அவசியத்திற்கா என்று யோசியுங்கள். எளிமை எவ்வளவு சிறப்பானது என்பதை அனுபவித்து உணருங்கள்.

*5. சூப்பர் மார்கெட்டுகள், ஷாப்பிங் மால்கள், ஆன்லைன் ஷாப்புகள் எல்லாவற்றிலும் பொருட்களை முன்னிலைப்படுத்தி உங்களை வசீகரப்படுத்துவது எப்படி என்ற மார்கெட்டிங் வகுப்புகள் எடுக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். வெளிப்படையாகச் சொன்னால், இந்த வகுப்புகளின் நோக்கம், அப்பாவிப் பொதுமக்களை எப்படி ஏமாற்றி, மூளையை மழுங்கச் செய்து, மொட்டையடிப்பது எப்படி என்பதுதான். (இப்படி ஒரு வர்த்தக கூட்டத்தில் மாட்டிக்கொண்ட போதுதான் தெரிந்தது, மக்களை எப்படி மூளைச்சலவை செய்கிறார்கள் என்று)*

*இந்தக் கட்டுரையைப் படித்துவிட்டு உங்கள் வீட்டை சுற்றி ஒவ்வொரு பொருளையும் பாருங்கள். உங்களை அறியாமலே எத்தனை அயல்நாட்டுத் தயாரிப்புகள், எத்தனை அனாவசியப் பொருட்கள் இருக்கின்றன என்பது உங்களுக்குப் புரியும்.*

*மாற்றி யோசித்து, மாற்றி வாங்கி, தேசத்திற்கு உதவுங்கள் சகோதர, சகோதரிகளே!*

*இன்றைய நிலவரப்படி ஏராளமான அயல்நாட்டுப் பொருட்களும் அவற்றைவிட சிறப்பான உள்ளூர் தயாரிப்புகளும் வந்துவிட்டன. உடுத்தும் உடையிலிருந்து உண்ணும் உணவுகள், உபயோகப்படுத்தும் பிற பொருட்கள் என்று அனைத்திலும் உங்கள் கவனத்தை செலுத்தி, இது இந்திய தயாரிப்பா என்று பார்த்து வாங்குங்கள். அற்புதமான நம் தயாரிப்புகள் சந்தையில் இருக்கின்றன. ஆனால் அவைகள் உங்களுடைய கண்களுக்குப் படாத வண்ணம் அடுக்கப்பட்டிருக்கும்.*

*பெண்கள் நினைத்தால், மனது வைத்தால் முடியாதது எதுவும் இல்லை.*

*நம்வீட்டுப் பொருட்கள் நமதாகவே இருக்கட்டும்!*
*வாழ்க பாரதம்! வந்தே மாதரம்!*

**- டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்**




# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**மணிமங்கலம், தாம்பரம், சென்னை**

**CODE 1405**

**பாடப்பிரிவுகள்:**

**இளநிலை (பி.இ.)**

**MECHANICAL, CIVIL, CSE, ECE, EEE**

**கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்**

**வளாக கட்டமைப்பு: கல்லூரி வளாகம் பசுமைச் சூழலில் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தனித்தனி வளாக கட்டமைப்பை தன்னுள்ளே கொண்டுள்ளது.**

**சிவனடியார்கள் குடும்பக் குழந்தைகளுக்கு சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.**



**டாக்டர். வி.பி.இராமமூர்த்தி. பிஎச்.டி.**
**நிறுவனம் மற்றும் கல்லூரி தலைவர்**
**மேனாள் அண்ணா பல்கலைக்கழக பேராசிரியர்**

# தனலட்சுமி பொறியியல் கல்லூரி

**டாக்டர். வி.பி.ஆர். நகர், மணிமங்கலம், தாம்பரம்,**
**சென்னை – 601 301, தமிழ்நாடு**

**Ph : 9 283 283 283 / 72 9999 6789 / 98416 55959**
**044 - 71 700 801 / 803 / 2436 3321.**
**www.dce.edu.in**

G. SIVAGAMASUNDARI
99940 89133



N. GURUMURTHY
99940 89140

# SRI SASTHA CATERING



*We are Supplying Meals,*
*Tiffin & Marriage Sear*
*Variation in Order*



14-C, Sitravasu Street, Macmillan Nagar, Nanganallur, Chennai.


# திருக்கோயில் உழவாரப்பணி மன்றம்

14, பாலசுப்ரமணியர் கோயில் தெரு,
லட்சுமி நகர், வேளச்சேரி, சென்னை - 600 042.

செல்: **9445121080, 7200935145**

ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகள் மகம் நட்சத்திரத்தை முன்னிட்டு எல்லா மாதமும் வேளச்சேரி **அருள்மிகு தண்டீஸ்வரர் திருக்கோயிலில் திருவாசகம் முற்றோதுதல்** நமது மன்றத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைபெறும் நாள் **15.04.2019 திங்கட்கிழமை மற்றும் 12.05.2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அதனைத் தொடர்ந்து அன்னம்பாலிப்பு நடைபெறும்.** அனைவரும் கலந்து கொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

# திருக்கோயில் உழவாரப்பணி

**07.04.2019, ஞாயிற்றுக்கிழமை**

சென்னை பாரிமுனை அரண்மனைக்காரன் தெரு

**அருள்மிகு சௌந்தராம்பிகை அம்பாள் உடனுறை**

**கச்சாலீஸ்வரர் திருக்கோயிலில்**




ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

# பசுமை

ஆர்கானிக் & நேச்சுரல்ஸ்

நெ. 5B/4, 7வது குறுக்கு தெரு, தண்டீஸ்வரம், வேளச்சேரி,
சென்னை - 600 042. (தினத்தந்தி அலுவலகம் அருகில்)

**044-42325018**

**இயற்கையாக விளைவிக்கப்பட்ட காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்கள்**

**செவ்வாய், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கிடைக்கும்**

**நாட்டு பசும்பால், பாரம்பரிய அரிசி வகைகள் சிறுதானியங்கள், மரச்செக்கு எண்ணெய், தேன் இரசாயணமற்ற அழகு சாதன பொருட்கள் மூலிகை பொடிகள், மூலிகை டீ மற்றும் எண்ணற்ற இயற்கை பொருட்கள் இங்கு கிடைக்கும்.**


# ஆரோக்கியமான வாழ்க்கைக்கு

## அன்றாடம் அக்குபிரஷர்

### அக்குபிரஷர் வரலாறு

நமது உடம்பில் நரம்புகள் எல்லா உறுப்புகளிலும் பரவியுள்ளன. இந்த நரம்புகளின் கடைசிப் பகுதியை அக்கு என்பார்கள். இந்த அக்கு, புள்ளிகளில் கொடுக்கப்படுகிற அழுத்தத்தை அக்குபிரஷர் எனவும், அக்குபுள்ளிகளில் ஊசிகளைக் கொண்டு குத்தினால் அக்குபஞ்சர் எனவும் கூறப்படுகிறது.

உடலின் தசைகளை இயக்குவது நரம்புகளின் வேலையாகும். இதை கருத்தில் கொண்டு நமது முன்னோர்கள், நம் உடலின் பாகங்களில் சில மர்மப் புள்ளிகள் உள்ளன என்று கண்டுபிடித்திருந்தார்கள். இந்த புள்ளிகளை நம் நாட்டில் வர்மப் புள்ளிகள் எனவும், சீனர்கள் அக்குபஞ்சர் புள்ளிகள் எனவும் பெயரிட்டனர்.

அக்குபஞ்சர் புள்ளிகளில் விரலினால் அழுத்தி அல்லது ஊசியால் குத்தி உடலிலுள்ள நரம்புகளையும், தசைகளையும் மறத்துப் போகச் செய்யவும் அவைகளின் செயல் திறனை ஊக்குவிக்கவும் முடியும் என்றும் கண்டுபிடித்தார்கள். இந்த முறைகளின் மூலம் நோய்களை குணமாக்கும் வைத்திய முறையே அக்குபஞ்சர் வைத்திய முறை என்றழைக்கப்படுகிறது.

இன்றைய பிரபல குங்பூ, கராத்தே, ஜுடோ என்று படிப்படியாக வளரும் சண்டைப் பயிற்சிகள், அக்குபஞ்சர் என்று மருத்துவ முறையிலிருந்து தோன்றியதே ஆகும்.


டாக்டர் S.K.**மீனா வாசுகி**
Acupuncture Specialist, Yoga & Varma Healer